


| | |
|---|---|
| 24.04.2025 | 17. தேவனை சந்திக்க 'என் இதய கதவை' திறந்திட யார் தடை செய்திட முடியும்! |




**சி**ல சமயங்களில் "நான் என் வேலையை முடிக்க இன்று 1 மணி நேரம் ஆகும்" என அனுமதி கேட்டால் உடனே கொடுத்து விடுவார். இந்த அறிக்கையை நான் மாற்றி "தேவனோடு அமர்ந்து ஜெபிப்பதற்கு ஒரு மணி நேரம் அனுமதி தாருங்கள்" என கேட்டால் அவர் நிச்சயமாய் அனுமதி தரமாட்டார்.

இப்போதெல்லாம், நான் அடிக்கடி சந்திக்கும் துன்பங்களுக்கு தேவனுடைய சமூகத்திற்குச் சென்று, அவருடைய சித்தம் அறிந்து வருவதே எனது ஒரே மன திருப்தியாய் மாறியது! ஆனால் என்னுடைய நிலையோ, ஜெபத்திற்குகூட என் கணவரிடம் அனுமதி கேட்கும் நிலைக்கு தள்ளப்பட்டேன். எனவே, தோட்டத்திற்குச் சென்று, என் நேசரோடு உறவாடும் இன்பத்தை நான் விரும்பியபடி அனுபவிக்க முடியாமல் உள்ளம் தவித்தேன்.

இந்த நிலையில்தான் தேவன் எனக்கு மற்றொரு விடுதலையான ஸ்தலத்தை திறந்து வைத்தார். ஆம், 'தேவனுடைய ஆலயமாகிய என் இருதயமே' என் ஜெப ஸ்தலமாய் மாறியது! நான் தோட்டத்திற்குச் சென்று ஜெபிப்பது நல்லதுதான், அங்கு என் நேசரோடு உரையாடி, அவருடைய சித்தத்தில் உறைந்திருப்பதும் நல்லதுதான்! ஆனால், அந்த சந்தர்ப்பம் இல்லாத சமயங்களில், என் இருதயத்தின் ஆலயத்தில் என் நேசரை தடையின்றி சந்திக்கும் உறவையும், ஐக்கியத்தையும் கண்டேன். தோட்டம் எனக்கு அடைக்கப்பட்டாலும், என் இருதயத்தின் ஆலய கதவு என் ஆண்டவருக்கு எப்போதும் திறந்திருக்கும் பாக்கியத்தைக் கண்டு நான் பேரானந்தம் கொண்டேன்!

*– (மேடம் குயான் வாழ்க்கை தீபங்கள்)*